THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No. 120/2019** **PW.9**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : முத்துகணேஷ்
Father's Name : சுப்பிரமணியன்
Village : வள்ளியூர்
Taluk : இராதாபுரம்
Employment : மார்க்கெட்
Age : 34 Date: 11.08.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(A4 present, A1, 2, 3 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**<u>முதல் விசாரணை</u> :-**

1.நான் வள்ளியூரில் வசித்து மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 ஆகும்.** அந்த கையெழுத்தை சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. வள்ளியூர் காவல் நிலையத்திற்கு விநாயகர் சிலை வைப்பதற்கு அனுமதி கேட்டு சென்றபோது போலீசாரிடம் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி- யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. போலீசார் விசாரணையில் கடந்த 14.12.2016 தேதி 18.00 மணிக்கு செம்பாடு விலக்கில் வைத்து வழக்கின் 2 வது எதிரியை போலீசார் விசாரித்த போது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும் அதில் நானும், அரிமுத்து என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும். பின்னர் எதிரி கொடுத்த தகவலின் அடிப்படையில் 2 வது எதிரியிடமிருந்து 7 பவுன் தங்க தாலி செயின் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

Sd/-P. Moses Jebasingh,
Judicial Magistrate,
Valliyoor.